## DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.54/2023**
**Prosecution Witness**:7

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ஆனந்த் (PW7) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th day of January 2026 by V.Nivedha Assistant, District Munsif Cum Judicial Magistrate Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை:–**

நான் தற்போது நாகப்பட்டினம் மாவட்டம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2023ம் வருடம் கொடுமுடி காவல்நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 22.05.2023ம் தேதியன்று சிவகிரி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திருமதி.எஸ்.தமிழ்செல்வி என்பவர் பதிவு செய்து வைத்திருந்த சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.82/2023 ச/பி.279, 304(A) இதச வழக்கினை மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பினை எனது வசம் ஒப்படைந்திருந்தார்.

2. நான் வழக்கு கோப்பினை 23.05.2023ம் தேதியன்று விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்று காலை 06.30 மணிக்கு சம்பவ இடமான வெடிக்காரன்பாளையம் பிரிவு அருகே சென்று சாட்சிகள் ஜெகநாதன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் சம்பவ இடத்தை அடையாளம் காண்பிக்க அவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:29:55 +0530

**செய்யப்படுகிறது.** மேலும் சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் ஆறுமுகம், கார்த்திகேயன், ஜெகநாதன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு சென்று காலை 08.30 மணிக்கு சவக்கிடங்கு முன்பு இறந்துபோன தனலட்சுமி என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேதத்தை பார்வையிட்டு பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை ஒன்று தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. இறந்துபோன தனலட்சுமி என்பவரின் பிரேதத்தை இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு சடலக்கூராய்வுக்கு கொடுமுடி அரசு மருத்துவமனை அலுவல் மருத்துவருக்கு பெண் தலைமைகாவலர் 2059 திருமதி. ராஜாமணி என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன்.

3. பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான கஜேந்திரன், திவாகரன், சுகுமார், கணேசமூர்த்தி, கார்த்திகேயன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் தயார் செய்தேன். கடந்த 10.06.2023ம் தேதியன்று காலை 13.30 மணிக்கு சிவகிரி காவல்நிலையத்தில் விசாரணைக்காக ஆஜரான எதிரி சக்திவேல் என்பவரை கைது செய்து தக்க தனிநபர் ஜாமினின் பேரில் விடுவித்தேன்.

4. அதன் பிறகு 13.06.2023ம் தேதி விபத்தில் எதிரி ஓட்டிவந்த வாகனமான TN 39 R 3555 என்ற எண்ணுள்ள மாருதி ஆம்னி காரையும், விபத்தில் இறந்துபோன தனலட்சுமி என்பவர் ஓட்டி வந்த TN 33 BK 1569 என்ற எண்ணுள்ள XL Super என்ற

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:30:00 +0530

இருசக்கர வாகனத்தையும் விபத்தின் காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் மூலம்அனுப்பிவைத்தேன். பின்னர் கடந்த 03.07.2023ம் தேதியன்று மேற்சொன்ன இரண்டு வாகனங்களையும் தணிக்கை செய்து சான்று வழங்கிய ஈரோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தை (கிழக்கு) சேர்ந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. சிவகுமார் என்பவரை விசாரணை செய்து வாகனங்களின் தணிக்கை சான்று பெற்று வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். **TN 39 R 3555 என்ற எண்ணுள்ள மாருதி ஆம்னி காருக்கு வழங்கிய தணிக்கை சான்று அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **TN 33 BK 1569 என்ற எண்ணுள்ள XL Super இருசக்கர வாகனத்திற்கு வழங்கிய தணிக்கை சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அரசு தரப்பில் கு.வி.மு.ச.294(3)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

5. 03.07.2023ம் தேதி விபத்தில் இறந்துபோன தனலட்சுமி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய கொடுமுடி அரசு மருத்துவமனையை சேர்ந்த மருத்துவர் திரு.ஆதித்யவிஜயராகவன் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அரசு தரப்பில் கு.வி.மு.ச.294(3)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)** பிரேத பரிசோதனையின் போது வழிக்காவல் செய்த நிலைய பெண் தலைமைகாவலர் 2059 திருமதி.ராஜாமணி என்வரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிவகிரி காவல்நிலைய உதவி

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:30:04 +0530

ஆய்வாளர் திருமதி. தமிழ்செல்வி என்பவரையும் விசாரித்தேன்.

6. இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரி சக்திவேலின் மீது கடந்த 03.07.2023ம் தேதி இதச பிரிவுகள் ச/பி.279, 304(A) இதசவின் கீழ் இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்பித்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

சாட்சிகள் ஜெகநாதன் மற்றும் பழனிச்சாமி ஆகிய இருவரும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் விபத்தில் சிக்கிய வாகனங்களின் உதிரி பாகங்களோ அல்லது ரத்த கறையோ இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்தவரை வேறு எந்த புகாரும் விபத்து சம்பந்தமாக பெறவில்லை என்றால் சரிதான். தென் வடல் ரோட்டை குறுக்கே கடந்த பொழுதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.. மேற்படி இடத்தில் ரோட்டை கடப்பதற்கான சைகை குறியீடுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளவாறு விபத்து சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் பேரில்சரி வர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியில்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:30:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.